74

# BOARD OF STUDIES

04-03-2017 10.00 A.M.

| S. No. | MEMBERS | SIGNATURE |
| --- | --- | --- |
| 1 | Dr. V. SELVARAJ (Chairman) | 04/3/17 |
| 2 | Dr. O. BALAKRISHNAN<br>Asso. Prof. in Tamil<br>Bharathiar University<br>Coimbatore - 641 046<br>(University Nominee) | 04/03/17 |
| 3. | Dr. V. KRISHNAN<br>Asso. Prof. & Head, Dept. of Tamil<br>Govt. Arts College, Udamelpet.<br>(Academic Auditor) | 4.3.17 |
| 4. | M. NATESAN (Pollachi Nasan)<br>(Special Invitee) | |
| 5. | M. GAYATHRI<br>Asst. Prof. in Tamil,<br>G.V.G. College of Arts science for women<br>Udamelpet.<br>(MEMBER - Alumini) | |
| 6. | Dr. K. RAMASAMY (AMUTHAN)<br>Emeritus Professor | |
| 7. | Dr. T. RAJKUMAR | 4/3/17 |
| 8. | Dr. S. SELVAKUMAR | |
| 9. | Dr. A. MAHALAKSHMI | |
| 10. | Dr. A. SIVANARUTSELVI | |
| 11. | T. PUSHPA RANI | |
| 12 | Dr. V. PARIMALAM | |

TAMIL UG & PG

SATURDAY



# MINUTES

என்.ஜி.எம். கல்லூரித் தமிழ் இலக்கியத் துறையில் 4.03.17 அன்று காலை 10.00 மணியளவில் பாடத்திட்டக்குழு ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கீழ்க்காணும் தீர்மானங்கள் ஆய்வுக் குழுவினரால் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தேர்வாணையரின் பரிந்துரைப்படி சிறப்பு அழைப்பாளராக பொள்ளாச்சி திரு. நசன், பல்கலைக்கழக உறுப்பினராக முனைவர் திரு. ஆ. பாலகிருஷ்ணன், பாடத்திட்டத் தணிக்கையாளராகத் முனைவர் திரு. வெ. கிருஷ்ணன், முன்னாள் மாணவர் சார்பாக, உடுமலை ஸ்ரீ.ஜி.வி.ஜி கல்லூரி உதவிப் பேராசிரியர் செல்வி. காயத்ரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் இலக்கியத் துறை மாணவர்களுக்குச் சைவ, வைணவத் தத்துவங்கள்' பற்றிய சான்றிதழ் படிப்பும், பிற துறை மாணவர்களுக்கு 'விவேகானந்தர் சிந்தனைகள்' என்ற சான்றிதழ் படிப்பும் கொண்டுவர வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. 2017-18ஆம் கல்வியாண்டில் இளங்கலைத் தமிழ் இலக்கியத் துறையில் சேரும் மாணவர்களுக்கு இக்கால இலக்கியம் I தாளில் மாற்றங்கள் செய்யப்பட்டன. அலகு நான்கில் முன்னணிப் பெண் கவிஞர்களின் கவிதைகள் இடம்பெறுகின்றன. மேலும் ஐந்தாம் அலகிலும் சென்ட்ரியு, குக்கூ, ஹைக்கூ ஆகியவை தன்சார்புப் (Self Study) பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

இக்கால இலக்கியம் II தாளில் புதிதாக குறுநாவல் சேர்க்கப்பட்டதுடன் சில மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் பருவத்திலுள்ள நீதி இலக்கியம் என்ற தாள் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அற இலக்கியம் என வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கிய வரலாறு என்ற தாளில் ஆசிரியர் தமிழண்ணலின் புத்தகத்திற்குப் பதிலாக அ.க. பெருமாள் அவர்களின் புத்தகம் பரிந்துரை

செய்யப்பட்டுள்ளது. நன்னூல் சொல்லதிகாரத்தில் இடையியல், உரியியல் ஆகிய இயல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இடைக்கால இலக்கியம் என்னும் தாளின் பெயரை பக்தி இலக்கியமும் சிற்றிலக்கியமும் என மாற்றம் செய்யப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இத்தாளில் புதிதாக கிறித்துவ, இஸ்லாமிய இலக்கியங்களும் சேர்க்கப்படவுள்ளன.

மக்கள் தகவலியல் பாடத்தில் வே. கிருஷ்ணன், கி. இராஜா ஆகியோரின் புத்தகங்களாக மாற்றம் செய்வதாக உள்ளது. புறப்பொருள் வெண்பாமாலையில் காஞ்சித்திணைக் குப் பதிலாக தும்பை அல்லது வாகைத் திணைப் பாடல்களைச் சேர்ப்பதென முடிவு செய்யப்பட்டது.

பார்வை நூல்களில் மிக முக்கியமான, பாடத்திட்டத்துடன் நெருங்கிய தொடர்புடைய புத்தகங்களை வைக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

அரசுத் தேர்வுத் தமிழ் தாளின் பாடநூல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பகுபொருள் இனம் என்பதை பாடுபொருள் என்பதாக மாற்றப் பட்டது.

சங்க இலக்கியநூல்களில் பாடல்களின் எண்ணிக்கைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சிறுகதை இக்கால இலக்கியம் தாளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இடைக்கால இலக்கியம், தொன்மை இலக்கியம் ஆகிய தாள்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கிறித்துவ, இஸ்லாமிய சமயங்களின் முக்கியத்துவம் கருதி அச்சமயம் சார்ந்த இலக்கியங்களில் சிறந்தவற்றைத் தேர்வு செய்து பாடத்திட்டத்தில் இணைக்க முடிவு செய்யப் பட்டுள்ளது.

பிற துறை மாணவர்கள் தமிழ் இலக்கியத் துறைக்கு வந்து பயிலும் தேர்வுப் பாடத்தின் (NME - அரசுத் தேர்வுத் தமிழ்) வினாத் தாள் முறையில் மாற்றம் தேவை என ஆலோசிக்கப்பட்டது. அதற்கான பாடநூல் தேர்வு செய்வது குறித்தும் கலந்துரையாடப் பட்டது.

தேவிரா அவர்களால் எழுதப்பட்ட போட்டித் தேர்வுகளுக்கான தமிழ் என்ற அடிப்படையிலமைந்த நூலினைப் பாடநூலாக வைப்பதென முடிவுசெய்யப்பட்டது.

அகராதிகள் தொடர்பான செய்திகள் அடங்கிய நூல்களைப் பாடத் திட்டத்தில் சேர்ப்பது குறித்தும் கலந்துரையாடல் செய்யப்பட்டது.

திரு. ம. நடேசன்
சிறப்பு அழைப்பாளர். — [signature]

முனைவர். ஆ. பாலகிருஷ்ணன்
பல்கலைக்கழகப் பிரதிநிதி — [signature] 04/03/17

முனைவர். வ. கிருஷ்ணன்
பாடத்திட்டத் தணிக்கையாளர் — [signature] 4.3.17

செல்வி. ம. காயத்ரி
முன்னாள் மாணவப் பிரதிநிதி. — ம. காயத்ரி

முனைவர் அமுதன் — அமுதன்

முனைவர். வே. செல்வராஜ் — [signature] 4/3/17

முனைவர். த. ராஜ்குமார் — [signature] 4/3/17

முனைவர். ஆ. மகாலட்சுமி — [signature]

முனைவர். சு. செல்வக்குமார் — [signature]

முனைவர். அ. சிவனருட்செல்வி — [signature]

திருமதி. த. புஷ்பராணி — த. புஷ்பராணி.

முனைவர். வை. பரிமளம். — [signature]